ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2235/69 - 2021 ජූලි මස 09 වැනි සිකුරාදා - 2021.07.09
*2235/69 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு யூலை மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

### சுங்க அறிவித்தல்

*சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 51ஆம் பிரிவிற்கு இணங்க சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் ஆக்கப்படும் அறிவித்தல்*

*சுங்கக் கட்டளைச் சட்டத்தின் (235 ஆம் அத்தியாயம்) 51 ஆம் பிரிவின் கீழ், எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, சுங்கப் பணிப்பாளர் நாயகம் கங்வாரிகே விஜித ரவிபிறிய ஆகிய நான், இக்கட்டளை மூலம் அறிவிப்பதாவது, சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 51 ஆவது பிரிவின் மூலம் குறித்துரைக்கப்பட்டவாறாக இறக்குமதியாளரால் அல்லது அவரது முகவரால் மேற்கொள்ளப்பட வேண்டிய பிரகடனமானது (இதனகத்துப்பின் பெறுமதிப் பிரகடனம் எனக் குறிப்பிடப்பட்டு அழைக்கப்படுகிறது), அட்டவணையில் குறிப்பிட்டுக் கூறப்பட்டுள்ளவாறாக 210 மி. மீ, x 297 மி. மீ. (ஏ4) அளவுகளைக் கொண்டதும், ஒரு சதுர மீற்றருக்கு 80 கிராம் அடர்த்தியைக் கொண்டதுமான வெள்ளை நிறக் கடதாசியிலான படிவமொன்றில் இருத்தல் வேண்டும்.*

*பெறுமதிப் பிரகடனமானது, சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 47 ஆம் பிரிவில் தேவைப்படுத்தப்பட்டவாறாக அத்தகைய பொருட்கள் தொடர்பில் சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட பொருள் பட்டியலில் குறிப்பிடப்பட்ட அத்தகைய ஒவ்வொரு பொருட்களது பெறுமதியினை உறுதிப்படுத்துவதாக இருத்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய பெறுமதிப் பிரகடனத்தில் கொடுக்கப்பட்ட விபரங்களுக்கு அத்தகைய சம்பந்தப்பட்ட ஆவணங்கள் ஆதாரமாக இருத்தலும் வேண்டும்.*

*சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட தன்னியக்க சுங்க வெளியாக்கல் முறைமை ஊடாக பெறுமதி பிரகடனத்தினை சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு இலத்திரனியல் மூலம் ஒப்புவிக்கப்படலாம். எவ்வாறாயினும், காகிதமற்ற வெளியாக்கல் முறைமை அறிமுகப்படுத்தப்படும் வரை, மேற்கூறிய தன்னியக்க சுங்க வெளியாக்கல் முறைமை மூலம் உருவாக்கப்பட்ட அத்தகைய பெறுமதி பிரகடனத்தில் கையொப்பமிடப்பட்ட பிரதியினை தொடர்புடைய பொருள் பட்டியலுடன் சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு ஒப்புவிக்கப்படலாம்.*

1A - G 34615 — 26 (2021/07)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

இந்த அறிவித்தலானது 2021, யூலை 12 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும்.

சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 51ஆம் பிரிவுக்கிணங்க சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் ஆக்கப்பட்டு, 2003, சனவரி 07 ஆந் திகதிய 1260/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலானது இத்தால் இரத்துச் செய்யப்படுகிறது.

மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) **ஜீ. வீ. ரவிபிறிய,**
சுங்கப் பணிப்பாளர் நாயகம்.

இலங்கைச் சுங்கம்,
கொழும்பு - 11,
2021, யூலை 08.

இலங்கைச் சுங்கம்

**பெறுமதி பிரகடனப் படிவம்**

1. சுங்கக் கட்டளைச்சட்டத்தின் அட்டவணை உ இலுள்ள உறுப்புரை 8(1) இற்கு இணங்க விலைப் பட்டியல் பெறுமதியில் உள்ளடக்கப்படாத செலவுகள் மற்றும் சேவைகளை கீழே பிரகடனப்படுத்தவும்.

| | | |
|---|---|---|
| 1.1 | தரகுக்கூலி மற்றும் முகவர் சேவைக் கட்டணம்: | .................. |
| 1.2 | கொள்கலன்களது செலவினம் | .................. |
| 1.3 | பொதியிடல் செலவினம் | .................. |
| 1.4 | கொள்வனவாளரால் பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட செலவினம் | .................. |
| 1.5 | உரிமைத் தொகைகள் மற்றும் அனுமதிப்பத்திரக் கட்டணம் | .................. |
| 1.6 | விற்பனையாளருக்கு கிடைத்த விற்பனை வரும்படிகளது பெறுமதி | .................. |
| 1.7 | போக்குவரத்துச் செலவினம் | .................. |
| 1.8 | இலங்கைத் துறைமுகத்திற்கான பிற போக்குவரத்து தொடர்புபட்ட கட்டணங்கள் | .................. |
| 1.9 | காப்புறுதிச் செலவினம் | .................. |
| 1.10 | மேலே பிரகடனப்படுத்தப்படாத ஏதேனும் பிற கட்டணங்கள் | .................. |
| | மொத்தம் | .................. |

2. சுங்கக் கட்டளைச் சட்டத்தின் அட்டவணை உ இலுள்ள உறுப்புரை 9 இற்கு இணங்க நீங்கள் விற்னையாளருடன் தொடர்புள்ளவரா?
.......................................

3. தொடர்பிருப்பின், பெறுமதியானது உறவினால் பாதிக்கப்பட்டுள்ளதா? ............................

4. விற்பனையாளர் விதித்த ஏதேனும் நிபந்தனைகள் அல்லது கட்டுப்பாடுகளுக்கு விற்பனை உட்பட்டதா ? (சுங்கக் கட்டளைச் சட்டத்தின் அட்டவணை உ இலுள்ள உறுப்புரை 1(1)(அ), (ஆ) ஐப் பார்க்கவும்) ...............................

5. ஒரே மாதிரியான/ஒத்த பொருட்களின் முந்திய இறக்கு மதிகள் ஏதேனும் இருப்பின் (கடந்த 3 மாதங்களுக்குள்) விலைப்பட்டியல் (சுங்கப் பிரகடன) இலக்கங்கள் மற்றும் திகதிகள் ?
.............................

6. கொடுக்கல் வாங்கல்களது தன்மை (விற்பனைகள்/ அன்பளிப்புகள்/வாடகை/போன்றவை)
...................................

7. பொருள் பட்டியல் பதிவு (சுங்கப் பிரகடன) இலக்கம் : பதிவுத் திகதி :

8. **பிரகடனம்**

1. இங்கு கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள், பொருள் பட்டியல் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்கள் என்பவற்றில் கொடுக்கப்பட்டுள்ள பொருட்களின் பெறுமதிகள் தொடர்பானவை என்பதை நான் இத்தால் பிரகடனப்படுத்துகிறேன்.
2. இங்குள்ள விவரங்கள் உண்மையானவையெனவும் சரியானவையெனவும் நான் இத்தால் பிரகடனப்படுத்துகிறேன்.
3. பிழையான பிரகடனங்களை தெரிவிப்பது சுங்கக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 52 இன் கீழ் அபராதங்கள்/பறிமுதல்களை விதிப்பனவுக்குள்ளாகும் என்பதனையும் நான் அறிவேன்.

---

இறக்குமதியாளர் /முகவர் ஒப்பம் ...................... ஒப்பமிட்டவரின் பெயர் : ................................
திகதி : ....................... கம்பனியின் பெயர் : .......................................

---

09. அலுவலக உபயோகத்திற்காக : திருப்தி/நமபத்தகாதவை/மோசடி என்ற சந்தேகம்
.......................................................................................................................................
.......................................................................................................................................

பெறுமதி மதிப்பீட்டாளர் : .................. திகதி : ..............................

---

10. சுங்க அத்தியட்சகரின் குறிப்புரைகள்: திருப்தி/நமபத்தகாதவை/மோசடி என்ற சந்தேகம்
.......................................................................................................................................
.......................................................................................................................................
சுங்க அத்தியட்சகர் : .................. திகதி : ..............................

---

இலங்கைச் சுங்கம்

**பெறுமதி பிரகடனப் படிவம்**

சுங்கப் பிரகடன இலக்கம்: பதிவுத் திகதி :

| வகை | பொருட்கள் | விபரம் | தரம்/ தயாரிப்பாளர் | மாதிரி | விவரக்குறிப்பு | உற்பத்தி செய்த நாடு | அளவு | பட்டியல் பெறுமதி | சேர்க்கப்பட்டவைகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

...........................................................
கையொப்பம் மற்றும் திகதி.

07-474